# உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை. அப் 18 : 10

**ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை**

என்ன நடக்குமோ என பயந்து போய் இருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே,

"**உனக்கு தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை**"என தேவன் வாக்களிக்கிறார். இந்த மாதத்தில் கீழ்கண்டவாறு உங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்யுங்கள்.

**எனக்கு தீங்கு செய்யும்படி ஒருவனும் என் மேல் கைபோடுவதில்லை.**

மீண்டும் மீண்டுமாக சொல்லிப் பாருங்கள்.

**எனக்கு தீங்கு செய்யும்படி ஒருவனும் என் மேல் கைபோடுவதில்லை.**

**பக்தன் பாடுகிறார்:**

உனக்கு எதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுமே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக்கொடியே
என்னை மறவா ஏசுநாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

இந்த மாதத்தில் அடிக்கடி இந்தப் பாடலை பாடுங்கள்.

தேவ ஊழியம் செய்யும் கர்த்தருடைய பிள்ளைகளே,

**அப்போஸ்தலர் 20:23,24** – ம் வசனத்தை நினைவுப்படுத்திக் கொள்ளுங்கள். கட்டுகளும், உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிற தென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை மாத்திரம் அறிந்திருக்கிறேன்.

ஆகிலும் அவைகளில் ஒன்றைங் குறித்து கவலைப்படேன். என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன். என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம் பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.

மீண்டுமாக சொல்லிப் பாருங்கள்

நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.

ஆம், பிரியமானவர்களே,

இயேசுவினிடத்தில் நீ பெற்ற ஆசீர்வாதத்திற்கு விரோதமாக ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை. ஆமென்

**"உனக்கு தீங்கு செய்யும்படி ஒருவனும் உன் மேல் கைபோடுவதில்லை"**

**பரிசுத்த வேதாகமத்திலிருந்து சில வசனங்களை எழுதுகிறேன். தியானியுங்கள்.**

**1. சங் 49 : 5** என்னை தொடருகிறவர்களுடைய அக்கிரமம் என்னைச் சூழ்ந்துகொள்ளும் தீங்கு நாட்களில் நான் பயப்பட வேண்டியதென்ன ?

**2. சங் 27:5** தீங்கு நாளில் அவர் என்னைத் தம்முடைய கூடாரத்தில் மறைத்து, என்னைத் தமது கூடார மறைவிலே ஒளித்து வைத்து என்னைக் கன்மலையின் மேல் உயர்த்துவார்.

**3. எரேமியா 17:17,18** தீங்கு நாளில் நீரே என் அடைக்கலம். நான் வெட்கப்படாமல், என்னைத் துன்பப்படுத்துகிறவர்கள் வெட்கப்படுவார்களாக. நான் கலங்காமல், அவர்கள் கலங்குவார்களாக.

**தீங்கு நாளில் கர்த்தர் நம்மை தப்புவிக்க**
**நாம் செய்ய வேண்டியது என்ன ?**

**சங் 41:1** சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்.
தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார்.

**எபேசியர் 6:13–16** தீங்கு நாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும், திராணியுள்ளவர் களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப் போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக் கொண்டவர்களாயும் நில்லுங்கள்.

**எபேசியர் 6 : 17** இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

**எபேசியர் 6 : 18** எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும், விண்ணப்பங்களோடும் ஆவியினாலே ஜெபம் பண்ணி, அதன் பொருட்டு மிகுந்த மன உறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக் கொண்டிருங்கள்.

**உனக்குத் தீங்குசெய்யும்படி ஒருவனும்**
**உன் மேல் கைபோடுவதில்லை**